## சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

## சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத 2வது வகுதி சேவையாளரின் (MN-01) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 01 வது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சை – 2023.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத 2வது வகுதி சேவையாளரின் (MN-01) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 01 வது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சையினை பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய 2023 ம் ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### I. பரீட்சையின் ஒழுங்கு விதிகள்.

1.1. 01வது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத 2வது வகுதி சேவையாளரின் (MN-01) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக.

1.1.1. பரீட்சை தொடர்பான விளக்கம்:-

| வினாப்பத்திரம் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|
| 01. தாபனக் கோவை,நிதிப்பிரமாணம் மற்றும் அலுவலக முறைமை | 3மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 02. சமுர்த்தி அபிவிருத்தி யாப்பு, வாழ்வாதார அபிவிருத்திக்கான அரசின் கொள்கைகள் | 3மணித்தியாலங்கள் | 100 | 40% |

1.1.2. பரீட்சைக்கான பாடத்திட்டம்

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடயப்பரப்பு | காலம் |
|---|---|---|
| தாபனக் கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் அலுவலக முறைமை | அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறைமை தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் அந்த அறிவினை செயற்பாட்டு ரீதியாக பயன்படுத்தும் திறமை, கடமை கடித ஆவணங்களை சரியாக விளங்கி தெளிவாக மற்றும் சுருக்கமான குறிப்பு மூலம் தமது கருத்து/அவதானிப்பு நிலையான அமைப்பில் முன்வைக்கக் கூடிய திறமை, பணி நடவடிக்கை விதி முறை, கட்டளை மற்றும் கடிதம் ஒன்றின் நகல் வரைவு.<br><br>பணி நடவடிக்கை விதி முறை மற்றும் தாபனக் கோவையின் VII, XII, XIV, XXIV அத்தியாயம் தொடர்பான அறிவு.<br><br>நி.பி. 119,<br>நி.பி. 124 இருந்து 128 வரை,<br>நி.பி. 133 மற்றும் 134,<br>நி.பி. 154 இருந்து 156 வரை,<br>நி.பி. 168,177,178 மற்றும் 343. | 3மணித் தியாலம் |
| சமுர்த்தி அபிவிருத்தி யாப்பு, வாழ்வாதார அபிவிருத்திக்கான அரசின் கொள்கைகள் | சமுர்த்தி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சரத்துக்கள், சமுதாய அடிப்படை வங்கி, கிராமிய அபிவிருத்திக்காக அரச கொள்கையினை அமுல்படுத்தும் திணைக்களம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் கடமைகள். | 3மணித் தியாலம |

2. விண்ணப்பிக்கும் முறை

இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்றவர்கள் இந்த அறிவித்தலின் இறுதியில் இருக்கும் மாதிரிப் படிவத்துக்கு அமைய A4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தினை மேற்பார்வை உத்தியோகத்தரின் சிபார்சுடன் **2023.03.24 ம் திகதி அல்லது அதற்கு முன் நீங்கள் சேவை செய்யும் மாவட்டத்தின், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு** வழங்கப்படல் வேண்டும்.விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத 2வது வகுதி சேவையாளரின் (MN-01) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 01 வது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சை''** என்று குறிப்பிடப்படல் வேண்டும். அத்தினத்துக்குப் பின் கிடைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. பரீட்சைக் கட்டணம்.

சித்தியடையாத பாடங்களுக்காக பரீட்சைக்கு மீள தோற்றும் போது ஒரு பாடத்துக்கு ரூபா இருநூற்றி ஐம்பது(ரூபா.250.00) வீதம் பரீட்சைக் கட்டணமாக நீங்கள் சேவை செய்யும் மாவட்டத்தின், மாவட்ட சமுர்த்திக் காரியாலயத்துக்கு 2003-02-99 க்கு வரவு வைக்கும் முறையில் செலுத்தி குறிப்பிட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்தின் குறிப்பிட்ட பகுதியில் கழற்றுவதற்கு முடியாதவாறு ஒட்டப்படல் வேண்டும்.

4. பரீட்சையில் தோற்றுவதற்கான தகைமை.

இந்த அறிவித்தலினை கவனமாக வாசித்து கேட்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் பூரணப்படுத்தி, விண்ணப்பத் திகதிக்கு அல்லது அதற்கு முன் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த அறிவித்தலுக்கு அமைய முன்வைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

5. பரீட்சைக்கு உள்வாங்குதல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல்.

விண்ணப்பித்த தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அனுமதிப்பத்திரம் மற்றும் நேர அட்டவணை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

6. பரீட்சைக்கு தோற்ற வருவதற்கான பிரயாணப்படி, இணைந்த கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது.

எம்.ஏ.எம்.ஆரிபா
மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)
பணிப்பாளர் நாயகத்தின் பொருட்டு

| |
|---|
| |

காரியாலய உபயோகத்துக்கு

**சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத 2வது வகுதி சேவையாளரின் (MN-01) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 01 வது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சை – 2023.**

01. 1.1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர்: (தமிழில்)……………………

……………………………………………………………………………………………

1.2. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர்: (ஆங்கிலத்தில்)……………..

……………………………………………………………………………………………

1.3. முழுப்பெயர்: (தமிழில்)…………………………………………………………..

……………………………………………………………………………………………

1.4. முழுப்பெயர்:
(ஆங்கிலத்தில்)…………………………………………………

……………………………………………………………………………………………

02. 2.1. பதவி:……………………………………………………………………………..

03. 3.1 அனுமதி அட்டைஅனுப்பப்படவேண்டிய முகவரி: (தமிழில்)………………………

……………………………………………………………………………………………...

3.2. அனுமதி அட்டைஅனுப்பப்படவேண்டிய முகவரி: (ஆங்கிலத்தில்)…………………

……………………………………………………………………………………………...

3.3. கடமை நிலையம் மற்றும் அதன் முகவரி:……………………………………………

……………………………………………………………………………………………...

3.4. தொலைபேசி இலக்கம்:

கடமை | | | | | | | | | | | தனியார்: | | | | | | | | | | |

04. 4.1 தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

4.2பிறந்ததிகதி | | | | | | | | | | | |

4.3. பால்: | |

05. 5.1 பரீட்சைக்குத் தோற்றும் மொழி: | |

5.2 தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் பரீட்சை: | |

5.3 தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் பாடம்/பாடங்கள்:

| | |
|---|---|
| | |
| | |

5.4 பரீட்சைக்கு தோற்றிய தவணைகளின் எண்ணிக்கை: | |

06. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இந்தப் பரீட்சைக்கான அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றுவதற்கு நான் உடன்படுகின்றேன்

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

07. தாபனத் தலைவரின் சிபார்சு:

இந்த விண்ணப்பத்தினை முன்வைத்த மேலே கையொப்பம் இட்ட உத்தியோகத்தர் இந்த மாவட்ட காரியாலயத்தில்/பிரதேச செயலகத்தில் சேவை செய்கின்றவர் என்பதனை உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பத்தினை சிபார்சு செய்து முன்வைக்கின்றேன்.

திகதி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் /பிரதேச செயலாளர் /உதவிப் பணிப்பாளர் / ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்கள்.

(பதவி முத்திரை)

08. மாவட்ட பிரதானியின் உறுதியுரை:

(i) மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்களை பரீட்சித்துப் பார்த்து, அவை சரி என்றும்,

(ii) விண்ணப்பதாரி இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை உடையவர் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர்

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும். |